

Botanical Name : **Adhatoda vasica**

New Name : **Justicia Adhatoda**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** - This plant is availbale in most part of Tamil Nadu |
| தமிழ் பெயர் | : | ஆடாதொடை |
| Hindi Name | : | Adosa |
| Part Used | : | Leaves, Root |
| Uses | : | Cough, Asthma, Chronic Bronchitis |
| | | கோழையகற்றி Expectorant |
| | | வெப்பகற்றி Febrifuge |

Propagation Planting Material by : Stem Cuttings

| | | |
|---|---|---|
| Espacement | : | 2 Metre X 2 Metre |
| Duration of Crop | : | Perennial Source |
| Grown Area | : | Distribution is common in all the districts of Tamil Nadu. |

**ஆடாதொடை :** இதன் இலையை குடிநீர் செய்து தேன் கலந்து கொடுக்க குருதியழல், சுரம், இருமல், இரைப்பு தீரும். இதன் இலையை உலர்த்தி சுருட்டாக சுருட்டி புகை பிடிக்க இரைப்பு நோய் தீரும். இதன் பூவை வதக்கி கண்களின் மீது வைத்து கட்ட கண்களில் உண்டாகும் நோய் தீரும். இதன் 10 இலையை அரைத்து சாறு எடுத்து 30-60 மி.லி. பெரியவர்களுக்குக் கொடுக்க இரத்த தட்டையணுக்களின் (Platelets) எண்ணிக்கைகள் அதிகமாகும்.



Botanical Name : **Aloe vera**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | குமரி |
| Hindi Name | : | Gheekuvar |
| Part Used | : | Leaf, Root |
| Uses | : | Tonic, Emmenagogue, Refrigerant<br>உரமாக்கி, ருது உண்டாக்கி, குளிர்ச்சியுண்டாக்கி |

Propagation Planting Material by : Roots & Saplings

| | | |
|---|---|---|
| Espacement | : | 60 CM X 60 CM |
| Duration of Crop | : | 6 Months Yield / Perennial Source |
| Grown Area | : | All over Tamil Nadu - Wild Source, Cultivated in Kancheepuram, Cuddalore, Sathur & Virudhunagar |

**குமரி (அ) சோற்றுக் கற்றாழை :** தோல் சீவிய இள மடலுடன் சீரகம் கற்கண்டு சேர்த்தரைத்து உட்கொள்ள குருதியும் சீதமும் கலந்த கழிச்சல் மற்றும் உடல் வெப்பம் குணமாகும். கற்றாழையின் சோற்றை பல முறை கழுவி, இதில் சிறிது சீனாக்கற்கண்டு சேர்த்து, சிறு துண்டில் முடிந்து தொங்கவிட அதில் நிர் வடியும். இதைக் கண்களில் விட கண்ணோய் கண்சிவப்பு முதலியன மாறும். நாட்பட்ட புண்கள் குணமாக இதன் மடலை பயன்படுத்தலாம். இதன் சோற்றை எடுத்து எண்ணெயிலிட்டு காய்ச்சி தலைக்கு தேய்த்து தலை முழுக மயிர் வளரும் நித்திரை உண்டாகும். இதன் பாலை கண்களின் மீது தடவி வர கண் இரப்பையில் உண்டாகும் புண்கள் தீரும். இதன் சோற்றை எடுத்து முகத்தில் தடவி வர முகப்பரு குறையும். இதன் சோற்றை தினமும் 3 தேக்கரண்டி அளவு எடுத்து நாட்டுச் சர்க்கரை தேவையான அளவில் சேர்த்து அரைத்து சாறாக காலையில் வெறும் வயிற்றில், சூட்டு உடம்பினர் உண்டு வர உடல் சூடு தணியும். கற்றாழை சோற்றை உடலில் தடவி வர தோல் வறட்சி நீங்கும்

குறிப்பு : கற்றாழை மடலை உபயோகிக்கும் முன் ஏழுமுறை கழுவியே பயன்படுத்த வேண்டும்.



Botanical Name : **Alpinia speciosa**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | சிற்றரத்தை |
| Hindi Name | : | Kulanjan |
| Part Used | : | Root |
| Uses | : | Expectorant, Febrifuge<br>கோழையகற்றி, வெப்பகற்றி |

Propagation Planting Material by : Rhizomes

| | | |
|---|---|---|
| Espacement | : | 60 CM X 60 CM |
| Duration of Crop | : | 1 Year Yield |
| Grown Area | : | Scattered Source in Tamil Nadu<br>Forest Nursery & Private Nursery |

**சிற்றரத்தை :** ஒரு துண்டு முதிர்ந்த சிற்றரத்தையை வாயிலிட்டுச் சுவைத்துவர, தொண்டையிற் கட்டும் கோழை, வாந்தி, இருமல் தணியும். சிற்றரத்தை குடிநீர் கப நோய்களுக்கு மிகவும் நல்லது. இதனை சுட்டு தேனில் குழைத்து முலைப்பாலில் கலந்து புகட்ட குழந்தைகளுக்கு உண்டாகும் முக்குற்ற பிணி நீங்கும்.



Botanical Name : **Andrographis paniculata**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | நிலவேம்பு |
| Hindi Name | : | Chiraita |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Malarial Fever, Dengue Fever<br>சுரமகற்றி, Antipyretic |

Propagation Planting Material by : Rhizomes

| | | |
|---|---|---|
| Espacement | : | 15 CM X 15 CM |
| Duration of Crop | : | 4 Months Yield |
| Grown Area | : | Cultivated in Thiruvannamalai & Neiveli.<br>Natural Source in Forest Area Salem. |

**நிலவேம்பு :** நிலவேம்பு 15 கிராம், கிச்சிலித்தோல் 195 மி.கி., கொத்தமல்லி 195 மி.கி. இவைகளை வெந்நீரில் சேர்த்து மூடி, ஒரு மணி நேரம் சென்றபின் வடிகட்டி 15-30 மி.லி. வீதம் தினம் 2-3 முறை கொடுக்கலாம். இதன் இலையை சாறு எடுத்து குடிக்க வயிற்றுப் பொருமல், கழிச்சல் தீரும். இதை குடிநீரிட்டு குடிக்க வளி, சுரம், நீர்க்கோவை நீங்கும், புத்திக்கு தெளிவு உண்டாகும்.



Botanical Name : **Cassia angustifolia**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | நிலவாகை (Senna) |
| Hindi Name | : | Sonamukhi |
| Part Used | : | Pods, Leaves |
| Uses | : | Constipation, Mild Laxative |
| | | மலமிளக்கி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 60 CM X 60 CM |
| Duration of Crop | : | 5 - 6 Months Yield |
| Grown Area | : | Cultivated Tirunelveli, Virudhunagar & Tuticorin |

**நிலவாகை (சென்னா) :** இதன் வேரோடு பிரப்பன் கிழங்கு, சுக்கு, மிளகு, காரைஇலை சேர்த்து உருட்டி கொடுக்க வளி குற்றத்தால் வரும் நோய்கள் தீரும். நிலவாகை 34 கிராம், சுக்கு 1950 மி.கி. இவைகளை 2 ஆழாக்கு வெந்நீர் சேர்த்து ஒரு மணி நேரம் ஊறவைத்து வடித்து கொள்ளவும். அளவு 30-60 மி.லி. இந்த குடிநீரோடு காடி சேர்த்து அரைத்து உடலில் பூச சொறி, சிரங்கு, படை, தேமல், ஆறாப் புண் நீங்கும். இதன் சூரணம் சிறந்த மலமிளக்கி



Botanical Name : **Catharanthus rosea**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | நித்யகல்யாணி |
| Hindi Name | : | Sadabahar |
| Part Used | : | Leaves, Roots |
| Uses | : | Anticancer Drug<br>புற்றுநோய்க்கான மருந்து |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 45 CM X 45 CM |
| Duration of Crop | : | 6 Months Yield |
| Grown Area | : | Cultivated in Virudhunagar, Tutricorin, Tirunelveli Dist. |

**நித்யகல்யாணி :** இதன் பூவை கஷாயமாக 25 மி.லி. அளவு தினமும் நான்கு வேளை குடித்து வந்தால் சிறுநீர்த்தாரை நோய்கள் தீரும். இதன் வேர் தூள் ஒரு சிட்டிகை அளவு சுடுநீரில் கலந்து மூன்று வேளை ஒரு வாரம் சாப்பிட நீரிழிவு கட்டுப்படும். இதன் வேரை பொடித்து அருந்தி வந்தால் குறைந்த ரத்த அழுத்த நோயை குணமாக்கும். இதன் இலையை சாறு எடுத்து குடித்து வந்தால் இரத்த புற்றுநோயை குணமாக்கும். மருத்துவரின் அறிவுரைப்படி உபயோகப்படுத்தவும்.



Botanical Name : **Cholorophytum borovillianum**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | முசிலி கிழங்கு |
| Hindi Name | : | Sufed Musli |
| Part Used | : | Tuber |
| Uses | : | Aphrodisiac, Nervine Tonic<br>காமம் பெருக்கி, உடல்தேற்றி, நரம்பு உரமாக்கி |

Propagation Planting Material by : Tuber

| | | |
|---|---|---|
| Espacement | : | 1 Feet X 1 Feet |
| Duration of Crop | : | 8 Months |
| Grown Area | : | Cultivated in Salem & Erode |

**வெள்ளை முசிலி :** இதனோடு சதாவேரி, மஞ்சள் சேர்த்து சாப்பிட்டு வந்தால் பெண்களுக்கு உண்டாகும் வெள்ளை, மலடு நோய் நீங்கும். இதனை பொடித்து சாப்பிட்டு வந்தால் ஆண்மைக் குறைவு தீரும்.



Botanical Name : **Coleus forskolii**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | மருந்து கூர்க்கன் |
| Hindi Name | : | Patherchur |
| Part Used | : | Tuber |
| Uses | : | Reduce the Blood Pressure<br>இரத்தக் கொதிப்பு நோய்க்கான மருந்தில் சேர்க்கப்படுகிறது. |

Propagation Planting Material by : Stem Cutting

| | | |
|---|---|---|
| Espacement | : | 2 Feet X 2 Feet |
| Duration of Crop | : | 6 Months |
| Grown Area | : | Cultivated in Salem, Thiruvannamalai, Villupuram, Erode & Cuddalore District. |

**மருந்து கூர்க்கன் :** இதன் வேர் கிழங்கைப் பொடித்து சாப்பிட்டால் கண் நோய், ரத்த அழுத்த நோய் தீரும். இதன் வேரை ஊறுகாய் செய்து சாப்பிட்டு வர இதய நரம்புகள் வலுப்பெறும்.



## Botanical Name : **Gloriosa superba**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub / Climber** |
| தமிழ் பெயர் | : | கலப்பைக்கிழங்கு, செங்காந்தள் (Official Flower of Tamil Nadu) |
| Hindi Name | : | Kalihari |
| Part Used | : | Tubers, Seeds |
| Uses | : | **Skin disorders**<br>தோல் வியாதிகள் |

Propagation Planting Material by : Rhizome & Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 1 Mts. X 1 Mts. |
| Duration of Crop | : | 10 Months Yield |
| Grown on | : | Cultivated in Erode, Coimbatore, Tirupur, Part of Dindugal, Virudhunagar |

**கலப்பைக்கிழங்கு :** இதன் கிழங்கை தேவையான அளவு எடுத்து நீர் விட்டு அரைத்து தொப்புள், உள்ளங்கை – உள்ளங்கால் இவ்விடங்களில் பூச பிள்ளைபேற்று வலி உண்படும். இதன் கிழங்கை கருஞ்சீரகம், காட்டு சீரகம், கார்போகரிசி இவைகளை சேர்த்து தோலின் மேல் தடவ தோல் நோய்கள் குணமாகும். இக்கிழங்கினை வெட்டி உப்பு சேர்த்து மோரில் ஏழு நாள் இரவில் ஊறவைத்து பகலில் உலர்த்தி வர சுத்தம் ஆகும். பின் ஒன்று அல்லது இரண்டு துண்டின் பொடியை உள்ளுக்கு கொடுக்க பாம்புக் கடி நஞ்சு தீரும்.



Botanical Name : **Gymnema sylvestre**

Habit : **Shrub / Climber - Fence Crop**

தமிழ் பெயர் : சிறுகுறிஞ்சான்

Hindi Name : Gurmar

Part Used : Leaves

Uses : Diabetes

மதுமேக நோய்

Propagation Planting Material by : Seeds & Stem Cutting

Espacement : 2 Mts. X 2 Mts.

Duration of Crop : Perennial Source

Grown Area : Most of the Forest Area, Eastern - Western Ghats & Hills in the Tamil Nadu (North Arcot, Salem, Namakkal, Dindigal)

**சிறுகுறிஞ்சான் :** 2 அல்லது 3 இலைகளை தினசரி காலையில் சாப்பிட்டு வர மதுமேக நோய்கள் தொடர்பான சர்க்கரை அளவை குறைக்கும். இதன் இலையை குடிநீரிட்டுக் கொடுக்க சுரம், இருமல் தீரும். இதன் இலையை விளக்கெண்ணெயில் வதக்கி நெறிகளுக்கு வைத்துக் கட்டலாம். இதன் வேரை குடி நீரிட்டு உள்ளுக்குக் கொடுக்க பாம்புக் கடி நஞ்சு தீரும்.



Botanical Name : **Hibiscus - rosa sinensis**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** |
| தமிழ் பெயர் | : | செம்பரத்தை |
| Hindi Name | : | Jasund |
| Part Used | : | Leaves, Flowers |
| Uses | : | Hair Oil Purpose, Blood Purifier<br>முடி வளர்வதற்காக தைலத்தில் சேர்க்கப்படும், இரத்த சுத்தி |

Propagation Planting Material by : Stem Cutting

| | | |
|---|---|---|
| Espacement | : | 2 Mts. X 2 Mts. |
| Duration of Crop | : | Perennial Source |
| Grown Area | : | Scattered Source all over Tamil Nadu Cultivated in Part of Trichy District & home gardens. |

**செம்பரத்தை :** இதன் பூ மொக்கை உலர்த்தி பொடியாக செய்து உண்ண ஆண்மை பெருகும். சிறுநீர் எரிச்சல் போகும். இதன் பூவை குடிநீர் அல்லது ஊறல் நீர் செய்து 35 மி.லி. அருந்த பெரும்பாடு நீங்கும். உடலுக்கு குளிர்ச்சி தரும். இலைச்சாற்றை தண்ணீரில் கலந்து அருந்த அல்லது குடிநீரிட்டுக் கொடுக்க வெள்ளை நோய் மாதருக்கு போகும். இதன் பூவை உலர்த்தி தண்ணீர் சேர்த்து அரைத்து கூந்தலில் தடவி தலை குளித்து வர முடி கறுத்து மென்மையாக வளரும். செம்பரத்தை பூவின் சாற்றுக்கு ஓரளவு தேங்காய் எண்ணெய் சேர்த்து, சிறு தீயிட்டு நீர் சுண்டும் வரை எரித்து எடுத்த, காற்றுப்படாமல் ஒரு குப்பியில் அடைத்து வைத்துக் கொண்டு தலையில் தடவிவர மூளை குளிர்ச்சியடைந்து மயிர்கள் கறுத்துச் செழுமையாக வளரும்.



Botanical Name : **Lippia nodiflora**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | பொடுதலை |
| Hindi Name | : | Bukkan, Jaipapli |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Dandruff<br>தலையில் பொடுகு நீக்கும் தைலத்தில் சேர்க்கப்படும் |

Propagation Planting Material by : Stem Cutting

| | | |
|---|---|---|
| Espacement | : | 1 Feet X 1 Feet |
| Duration of Crop | : | 4 Months |
| Grown Area | : | Wild Source in River Bands all over Tamil Nadu |

**பொடுதலை :** இதன் இலையை துவையல் செய்து சாப்பிட உள்மூலம் தணியும். இதன் இலையை வதக்கி வறுத்த ஓமத்துடன் சேர்த்து அரைத்து நீர்விட்டு கொதிக்க வைத்து வடிகட்டி ஒரு சங்கு அளவு அருந்த குழந்தைக்கு கழிச்சல் நிற்கும்.



Botanical Name : **Mucuna pruriens**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb / Climber** |
| தமிழ் பெயர் | : | பூனைக்காலி |
| Hindi Name | : | Kavach |
| Part Used | : | Seeds |
| Uses | : | Aphrodisiac |
| | | காமம் பெருக்கி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 60 CM X 60 CM |
| Duration of Crop | : | 6 Months |
| Grown Area | : | Cultivated in Madurai & Dindigal |

**பூனைக்காலி :** இதன் விதையை உலர்த்தி பொடித்து 520-1040 மி.கி. பாலில் கலந்து அருந்த ஆண்மை உண்டாகும். நடுக்குவாதத்திற்கு சிறந்த மருந்து.



Botanical Name : **Myristica fragrans**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | ஜாதிக்காய் |
| Hindi Name | : | Jayaphal |
| Part Used | : | Seeds |
| Uses | : | Dispepsia, Insomnia, Diarrhoea<br>அஜீரணம், தூக்கமின்மை, வயிற்றுப்போக்கு |

Propagation Planting Material by : Seedlings / Grafting

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts X 6 Mts. |
| Duration of Crop | : | Annual |
| Grown Area | : | Cultivated in Mettupalayam, Kolli Hills, Yercaud, Ooty, Courtralam & Theni District. |

**ஜாதிக்காய் :** இதன் காயை அரைத்து கண்ணை சுற்றி பற்றுப் போட கண் ஒளி அடையும். இதன் காயை உலர்த்தித் தூள் செய்து 2 கிராம் பாலில் கலந்து கொடுக்க பெருங்கழிச்சல் போகும். சிறு வெட்டுக்காயங்களில் ஜாதிக்காய் பொடியை வைத்து அழுத்த இரத்தம் வடிதல் நிற்கும். புண்களை கழுவ ஒரு டம்ளர் வெந்நீரில் ஜாதிக்காய் பொடி ஒரு ஸ்பூன் சேர்த்து நீரை பயன்படுத்தலாம்.



Botanical Name : **Ocimum sanctum**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | துளசி |
| Hindi Name | : | Tulsi |
| Part Used | : | Seeds |
| Uses | : | Stimulant, Expectorant, Cough<br>வெப்பமுண்டாக்கி, கோழையகற்றி, ஆஸ்துமா, இருமல் நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 45 CM X 45 CM |
| Duration of Crop | : | 6 Months Repeat Harvest |
| Grown Area | : | Cultivated in Salem, Dindigal Dist. & Erode |

**துளசி :** துளசி இலையையும், ஊறல் நீரையும் உட்கொள்வதால் கோழை ஒழியும். இலையுடன் தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி நீராவி பிடித்தாலும், தலைமுழுகச் செய்தாலும் ஐயம் நீங்கும். கப நோய்களுக்கான மருந்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இலைச்சாறு அருந்த அல்லது துளசி இலையை மென்று தின்ன சுரம், பீனிச நோய் தீரும். குழந்தைகளுக்கு முலைப்பாலால் வரும் மாந்தம் தீரும். கருந்துளசி இலையை உலர்த்தி பொடித்து மூக்கில் விட புழுக்கள் வெளிப்படும். தினமும் காலையில் நான்கு முதல் எட்டு துளசி இலைகளை உண்டு வர நெஞ்சு சளி நீங்கும்



Botanical Name : **Phyllanthus amarus**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | கீழாநெல்லி |
| Hindi Name | : | Jaramla |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Hepatic Tonic, Viral Hepatitis<br>ஈரல் உரமாக்கி, காமாலைக்கான சிறந்த மூலிகை |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 15 CM X 15 CM |
| Duration of Crop | : | 4 Months Yield |
| Grown Area | : | Natural Source throughout Tamil Nadu<br>Cultivated in Cuddalore, Kancheepuram,<br>some part of Salem & Thiruvannamalai. |

**கீழாநெல்லி :** இதன் இலையை உப்பு சேர்த்து அரைத்து உடல் மேல் பூச சொறி, சிரங்கு போகும். இதன் வேரை பச்சையாக அரைத்து 17 கிராம் அளவு எடுத்து பாலில் கலக்கிக் கொடுக்க மஞ்சள் காமாலை போகும். இதன் தண்டுகளை இடித்து சாறு பிழிந்து விளக்கெண்ணெயில் கலந்து கண்ணில் விட கண்காச நோய்களுக்கு நல்லது. கீழாநெல்லி இலையை அரைத்து கற்கமாக ஒரு டம்ளர் மோரில் கலந்து கொடுக்க பித்தம் தணியும்.



Botanical Name : **Phyllanthus embilica**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | நெல்லிக்காய் |
| Hindi Name | : | Aamla |
| Part Used | : | Fruit |
| Uses | : | Astringent, Antioxidant, Cough<br>துவர்ப்பி, உடல் உரமாக்கி, காயகல்ப மூலிகை, இருமல் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | 1 Year / Perennial Source |
| Grown Area | : | Wild Source in Forest all over Tamil Nadu particularly in Sathyamangalam, Erode Dist., Hybrid Varieties by Farmers rarely. |

**நெல்லிக்காய் :** நெல்லிக்காயை துவையல் செய்து சாப்பிட சுவையின்னை, வாந்தி இவைகளைப் போக்கும். நெல்லிவற்றலை குடிநீர் செய்து கொடுக்க மயக்கம். தாகம், ஒக்காளம் இவை நீங்கும். இலைக் கொழுந்தை அரைத்து மோரில் கலந்து சீதக்கழிச்சலுக்கு கொடுக்கலாம். தினம் ஒரு நெல்லி கனியை உண்டு வர நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும். வைட்டமின் “சி” சத்து உள்ளது.



Botanical Name : **Piper nigrum**

Habit : **Trees**

தமிழ் பெயர் : மிளகு

Hindi Name : Kalimirch

Part Used : Fruit

Uses : Indigestion, Asthma, Cough, Antidote
Chronic Rheumatism, Throat Complaints, Fever
வயிற்று நோய்கள், இருமல், வாத நோய்கள்,
தொண்டை வலி, காய்ச்சல், நஞ்சுகள் தீரும்.

Propagation Planting Material by : Stem Cuttings

Espacement : 2 Mts. X 2 Mts.

Duration of Crop : Perennial Source

Grown Area : Cultivated in Yercaud, Kolli Hills, Ooty, Kodaikanal & Pudukkottai

**மிளகு :** இதனை சாப்பிட்டு வர முதியோருக்கும் மெலிந்தோருக்கும் வரும் மூலநோய் நீங்கும். இது பல்பொடி செய்வதற்குரிய பொருட்களில் ஒரு முக்கிய சரக்கு. இது பசிதீயை தூண்டும். 8-10 மிளகை எடுத்து பொடி செய்து ஒரு டம்ளர் பாலில் கலந்து குடிக்க சளியுடன் கூடிய இருமல் நீங்கும்.



Botanical Name : **Stevia rebaudiana**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | சீனிதுளசி |
| Hindi Name | : | Meethi Patti |
| Part Used | : | Leaves |
| Uses | : | Substitute for Sugar to Sweeten Tea & Medicines<br>சர்க்கரைக்கான மாற்றுப் பொருள் |

Propagation Planting Material by : Stem Cuttings, Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 45 CM X 45 CM |
| Duration of Crop | : | 6 Months Yield |
| Grown Area | : | Cultivated in Part of Krishnagiri & Hosur area under Small Scale |

**சீனிதுளசி :** இது சர்க்கரை நோய், குருதி அழுத்தம், உடல் பருமன் ஆகியவற்றை கட்டுப்படுத்தும். இதில் வைட்டமின் ஏ மற்றும் சி. சத்துக்கள் உள்ளன. இதில் புற்றுநோய் எதிர்ப்பு சக்தி உள்ளது. இதன் இலையை கசாயம் செய்து கொடுக்க பற்சொத்தை, ஈறுவீக்கம் முதலியன போகும்.



Botanical Name : **Vetiveria zizanioides**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | வெட்டிவேர் |
| Hindi Name | : | Khas |
| Part Used | : | Root |
| Uses | : | Fever, Refrigerant<br>காய்ச்சல், குளிர்ச்சியுண்டாக்கி |

Propagation Planting Material by : Saplings / Slips

| | | |
|---|---|---|
| Espacement | : | 60 CM X 60 CM |
| Duration of Crop | : | 10 Months Yield |
| Grown Area | : | Cultivated mainly in Cuddalore District & some patches in Tamil Nadu. |

**வெட்டிவேர் :** வெட்டிவேரை பொடி செய்த தூள் 500 முதல் 600 மி.கி. வரை ஊறல் நீர் 30 மி.லி. – 65 மி.லி. கொடுக்க ஜய சுரம், வயிற்று நோய் முதலியவைகளுக்கு கொடுக்கலாம். இதன் குடிநீர் உடல் சூட்டினை குறைக்கும். இதன் விசிறியால் உடல் எரிவு, நாவறட்சி இவைகள் நீங்கும்.